முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 716**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

14.09.2021, செவ்வாய்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா போற்றி
   ஞானபண்டிதன் என் வடிவாக வந்தநல்
   ஞானதேசிகனே உமை போற்றி
   ஞாலமதில் சுப்ரமணியப்பெருமான் யானும்
2. யானும் பிலவ வேங்கை திங்கள் தன்னில்
   நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   ஆற்றல்பட அரங்கன் சக்திகொண்டு
   அகிலத்தை ஆறுமுகன் மாற்றம் செய்வேன்
3. செய்வேனப்பா உன் தொண்டர்படை கொண்டு
   சித்திகள் உலகமெங்கும் பெரிதாக்கி
   ஐயமற உலகோரை ஞானவழி திருப்பி
   அழியாமை தந்து அவரவர் மூலமாக
4. ஆகவே உலகத்தில் அமைதி பாதுகாப்பு
   உயர்வான சூழல்களை உருவாக்கி
   கலகம் துன்பம் இடர்பாடுகளில்லா
   கண்ணியமிக்க ஞானபூமியாக இந்த உலகை மாற்றி
5. மாற்றியே ஆறுமுகப்பெருமான் யானும்
   மகத்துவம்பட ஞான சித்தர் ஆட்சிக்காலம்
   ஆற்றல்பட உருவாக அருள்புரிவேன்
   அரங்கனே கலியின் சிறந்த ஞானி
6. ஞானியரின் உண்மை வழி வரும் மக்களே
   ஞாலமதில் ஞானிகளாகி அரங்கன் வழிவழி
   ஞானயுகம்படைத்து சிறப்பர்
   நாட்டிடுவேன் அரங்கன் செய்து வரும் தர்மபலம்
7. தர்மபலத்தால் மக்களுக்கு மரணம் வெல்லும் பலம்
   தடையற இந்த பேருலகில் கிட்ட நேரும்
   கர்மவினை போக்கி காக்கும் ஒரே சக்தி
   கலியுகத்தின் மாதவசி அரங்கன்தானப்பா

8. அப்பனே அரங்கனை தொடர்ந்து உலகோர்
ஆற்றல்பட ஆறுமுகன் என் வழிபாட்டை செய்ய
வரங்களாக யாவர்க்கும் சித்தி கூடி
வையகத்தில் ஞானசித்தர் ஆட்சிக்காலம் உருவாகும்
9. ஆகவே அரங்கனே இந்த அற்புதத்தை கலியினில்
ஆற்றல்பட என் சூட்சுமமாக நடத்தவிருக்க
வரங்கள் பெற உலகோரே ஓங்காரக்குடில் நோக்கி
வாரீர் வாரீர் அரங்கன் வழி உலகமாற்றம் காண
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–